# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2125 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24

*2125 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1012 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- மாகாண சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2019, மே மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1011- B81526 - 5,403 (2019/05)

# பதவிகள் - வெற்றிடம்

## வடமேல் மாகாண அரசாங்க சேவையில் மாகாண இறைவரி சேவையில் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்காக ஆட்சேர்த்துக் கொள்ளல் -2019

(நிர்வாக உத்தியோக சேவைப் பிரிவு I ஆம் தரம்)

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைப்படி வடமேல் மாகாண இறைவரித் திணைக்களத்தில் மாகாண ஆணையாளர் பதவிக்காக தகைமையுடைய இலங்கை ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவிப் பெயர்** : மாகாண இறைவரி ஆணையாளர் (நிர்வாக உத்தியோகத்தர் சேவைப் பிரிவு I ஆம் தரம்)

2. **சேவை நிபந்தனைகள் :**
   I. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.
   II. அரசாங்க சேவையில் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வது பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் I ஆம் பகுதியில் II 'ஆ' பகுதியில் உட்படுத்தப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு உள்வாங்கப்பட வேண்டும்.

3. **சம்பள பிரிவு மற்றும் சம்பள அளவு :**
   SL1 - 2016 ரூபா - 47,615 - 10X1335-8X1630-17X 2170 - ரூபா 110,895.00 என்றாலும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 3/2016 விதிகளுக்கு அமைய அதன் உப அட்டவணை II இன் படி சம்பளம் செலுத்தப்படும்.

4. **தகைமைகள் :**
   நிர்வாக உத்தியோகத்தர் பிரிவில் (1 ஆம் தரத்தில்) குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பிரிவில் மொத்த சேவைக் காலம் 20 ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு 05 ஆண்டுகள் தொடர்ந்து மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அதிகாரிகள் மத்தியில் இருந்து பொருத்தமான அதிகாரி ஒருவரை மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை :**
   வடமேல் மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரைப்படி விண்ணப்பதாரிகளுக் கிடையில் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்.

6. **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் செயல்முறை :**

| தொ. இல. | தகுதிநிலை | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | நிர்வாக சேவை உத்தியோகத்தர் பிரிவு என்ற வகையில் 20 ஆண்டுகளுக்கு மேல்சேவை செய்துள்ள ஒரு ஆண்டிற்காக 03 புள்ளிகள் படி | ஆகக்கூடியது 30 புள்ளிகள் |
| 02 | பெற்றுக் கொண்டுள்ள கல்வித் தகைமைகளின் படி | |
| | I. முதுமாணி பட்டம் டிப்ளோமா ஒன்றிற்காக (பாடத்திற்குரிய ) 10 புள்ளிகள்<br>II. முதுமாணி பட்டத்திற்காக (பாடத்திற்குரிய) 15 புள்ளிகள்<br>(பெறப்பட்டுள்ள உயர் கல்வித் தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| | III. 06 மாதத்திற்கு குறையாத ஆங்கில மொழி டிப்ளோமாவிற்கு | 10 புள்ளிகள் |
| | IV. கணினித் திறமை (06 மாதத்திற்கு குறையாத பாட கோப்புக்கு) | 10 புள்ளிகள் |
| 03 | நிர்வாக உத்தியோகத்தர் பிரிவில் ( 1 ஆம் தரத்தில்) சேவையில் உள்ள சேவை காலத்திற்காக விண்ணப்பப்படிவம் கோரப்படும் திகதிக்கு ஒரு ஆண்டிற்காக 1 1/2 புள்ளிப்படி மற்றும் வருடத்திற்கு குறைந்த 6 மாதத்திற்கு கூடிய சேவை காலத்துக்கு 1 புள்ளிப்படி | ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| 04 | வடமேல் மாகாண சபையில் இறைவரிச் சேவையில் சேவை செய்த காலத்திற்காக (ஒரு ஆண்டுக்கு 1 புள்ளிப்படி) | ஆகக்கூடியது 05 புள்ளிகள் |

| தொ. இல. | தகுதிநிலை | புள்ளிகள் |
|---|---|---|
| 05 | இறைவரிச் சேவையில் செய்யப்பட்டுள்ள விசேட செயற்திட்டத்தின் எழுத்து மூலமான ஆவணத்திற்காக | |
| | I. பிரசித்தி பெற்ற செய்தித்தாளில் வெளியிட்ட கட்டுரைக்காக (02 புள்ளிப்படி)<br>II. வார இதழ் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு செய்திக்காக (03 புள்ளிப்படி)<br>III. ஒரு கருத்தரங்களில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விவாதத்திற்கு (05 புள்ளிப்படி) | ஆகக்கூடியது 10 புள்ளிகள் |
| 06 | முன்வைக்கும் திறமை பற்றிய இயலுமை மற்றும் ஆளுமை திறனுக்கு | 05 புள்ளிகள் |
| | மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை | 100 புள்ளிகள் |

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவம் 2019.06.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு "வடமேல் 'ஆளுநரது செயலாளர், வடமேல் மாகாண ஆளுநர் பணிமனை, மாளிகை, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண இறைவரித் திணைக்களத்தில் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தினது, நிருவாக உத்தியோக சேவையில் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற கடிதத்தினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றினையும் அனுப்ப வேண்டும்.

8. முழுமையற்றதும் ஒழுங்கற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைப்படி,

என். பி. எம். காரியவசம்,
வடமேல் ஆளுநரது செயலாளர்.

வடமேல் மாகாண ஆளுநரது பணிமனை,
மாளிகை,
குருநாகல்,
2019, மே 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண இறைவரி சேவையில் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்காக சேர்த்துக் கொள்ளல் - 2019**
**(நிர்வாக உத்தியோக சேவைப் பிரிவு I ஆம் தரம்)**

1. உத்தியோகத்தரின் பெயர் :
   (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................
   (ii) முதலெழுத்துக்களினால் குறிக்கும் பெயர் : ..........................................................................
2. முகவரி : ...........................................................................
   (i) அலுவலக முகவரி : ......................................................
   (ii) தனிப்பட்ட முகவரி : ........................................................................
3. தொலைபேசி இல. : ..............................................................
   (i) அலுவலக : ......................................................
   (ii) தனிப்பட்ட : ............................................. கையடக்க : ................................

4. பிறந்த திகதி : ...................................

2019.06.14 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ................. மாதங்கள் : ................. நாட்கள் : ...........................

5. தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6. பால் (ஆண்/பெண் ) : .............................

7. மதிப்பீட்டாளர் பதவிற்கு நியமிக்கப்பட்ட திகதி : ...........................................................................

8. தற்போது வகிக்கும் பதவி : ..........................................................

அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ....................................................

9. அப் பதவியில் சேவைக் காலம் : .................................................................................................

10. தனது சேவை காலத்தினுள் எச்சந்தர்ப்பத்திலாவது தனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? ..................................... அவ்வாறாயின் அதுபற்றிய விபரம் : ....................................................

என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .............................

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவர் இந்தத் திணைக்களத்தில் ............................. சேவை ஆற்றுவதாகவும் அவரது சேவை மகிழ்ச்சிகரமானதும், இப் பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................

......................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
அதிகாரப்பூர்வ முத்திரை.

05-906

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.